6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

165. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினர் (உறுப்பினர்களுக்கான சம்பளங்கள்—மருத்துவச் செலவு ஈடுசெய்தல்) விதிகளைச் செய்வது குறித்து பொதுத் (பணியாளர்—அமைப்பு—I) துறையின் 15—5—1979 ஆம் தேதியிடப்பெற்ற 906 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/ 1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

166. தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-இரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டத்தின்கீழ் வரி ஏற்பாட்டு அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அலுவல்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் வகையில் அதிகாரிகளை நியமிப்பது குறித்து, வணிகவரிகள்— சமைய அறக்கட்டளைகள் துறையின் 9—3—1979 ஆம் தேதியிடப்பெற்ற 270 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1948) 67 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

167. சிறிய பயணியர் பேருந்துகளை அறிமுகப்படுத்துவதைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 8—3—1979 ஆம் தேதியிடப்பெற்ற 626 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் எண் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

168. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களுக்கு இழப்பீடு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 4—7—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1458 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].